செய்தி வெளியீடு எண்.46 நாள்.03.06.2021

# பத்திரிக்கைச்செய்தி

## ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’’ துறையின் கீழ் சென்னையில் இன்று (3.6.2021) பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

தமிழகத்தின் மாண்புமிகு முதல் அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் 18.05.2021 அன்று ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” என்ற புதிய துறை துவக்கி வைக்கப்பட்டது. அதில் பெறப்பட்ட மனுக்களை 100 நாட்களுக்குள் தீர்வு காணும் பொருட்டு பெறப்பட்ட 17315 மனுக்களில் சென்னை மாவட்டத்திற்கு 14489 மனுக்கள் TNEGA மூலம் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டது.

மேற்படி மனுக்கள் மீது களஆய்வு மற்றும் விசாரணை மேற்கொண்டு இதுவரை 204 பயனாளிகள் பயனடைந்து உள்ளனர். இன்று (03.06.2021) சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஆகியோர் முன்னிலையில் 28 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மேலும் பொதுமக்களின் சாலை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகள் கோரிய மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தில் வருவாய் துறையின் கீழ் விதவை உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, முதிர்கன்னி உதவித்தொகை, கணவரால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை போன்ற ஓய்வூதியத்தொகை என ஆண்டிற்கு ரூ.20,52,000/- செலவின மதிப்புள்ள நலத்திட்டங்களும், நத்தம் பட்டாக்கள், கலப்பு திருமணச்சான்று, பட்டா பெயர் மாற்றம் மற்றும் சாதிச்சான்றிதழ்களும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாக மூன்று சக்கர வண்டி மற்றும் காதொலி கேட்பு கருவிகளும் வழங்கப்பட்டது.

**வெளியீடு**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை-01**